FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348065

1. District : Krishnagiri PS: V & AC Year: 2025 FIR No.: 08/AC/2025 Date: 23.05.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Act, 1988 as amended Sections பிரிவுகள்: 7(a)
(iii) Act சட்டம்: no 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 14.05.2025 at 12.00 hrs,
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 14.05.2025 at 17.15 hrs
Time Period : Time from : Time to : &
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை 22.05.2025 at 13.10 hrs

(b) Information Received at PS. Date : 23.05.2025 Time : 06.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer typed complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: o/o the Village Administrative Office
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Veerannakuppam Revenue Village
Uthangarai Taluk, Krishnagiri D
about 55 kms east

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. P. Vadivel (b) Father's/ Husband's Name : Tr. Ponnusamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 51/2025 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Farmer (g) Address : No.10, Kattirampatti village,
தொழில் முகவரி Thoddampatty post, Uthangarai Taluk,
Krishnagiri District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Agathiya Thuyavan, Village Administrative Officer, Veerannakuppam
Revenue village, Uthangarai Taluk, Krishnagiri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Vadivel. 23/05/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

M. N 23/5/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.05.2025 at 09.10 hrs

Name: Thiru M. NAGARAJAN
Rank: நிலை Dy. Supdt of POLICE,
V&AC, DHARMAPURI
FAC KRISHNAGIRI.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 8/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 23.05.2025-ம் தேதி காலை 06.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், தொட்டம்பட்டி அஞ்சல், கதிரம்பட்டி கிராமத்தை சேர்ந்த (லேட்) திரு.பொன்னுசாமி மகன் திரு.P.வடிவேல் என்பவர் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புதல் P.வடிவேல், வயது-51, S/o (லேட்) பொன்னுசாமி, கதவு எண்.10, கதிரம்பட்டி கிராமம், தொட்டம்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுதல், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, கிருஷ்ணகிரி மாவட்டம். அய்யா, நான் மேலேகண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி மனைவி மற்றும் ஒரு மகள் உள்ளனர். நான் விவசாயம் செய்து வருகிறேன். எங்கள் ஊரில் எனது அம்மா திருமதி.காமாட்சி பெயரில் கதிரம்பட்டி பட்டா எண் 142-ன் படியும், கிராம புல எண்கள். 17/12A,17/20A,17/3,17/6A, 17/7A, 17/7B மற்றும் 18/7A ன்படி சுமார் 2.62 ஏக்கர் விவசாய நிலம் இருந்தது. அந்த நிலத்தை கடந்த 2019-ஆம் ஆண்டு ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலக பத்திர எண். 6457/2019-ன் படி எனது மனைவி சசிகலா பெயரில் எனது அம்மாவிடமிருந்து சுத்த கிரையம் பெற்றோம். அந்த கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள ஏழு புல எண்களுக்கு எனது மனைவி சசிகலா பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யவேண்டி கடந்த 2019-ஆம் ஆண்டு விண்ணப்பம் செய்தேன். அதன்பேரில் எனது மனைவி சசிகலா பெயருக்கு 17/3, 17/7A, 17/7B, 18/7A ஆகிய நான்கு புல எண்களுக்கு மட்டும் கடந்த 2020-ஆம் ஆண்டு பட்டா எண்.175 என தனி பட்டா வழங்கப்பட்டது. அந்த தனிப்பட்டாவில் மீதமுள்ள புல எண்கள் 17/12A, 17/20A மற்றும் 17/6A ஆகியவை விடுபட்டுவிட்டது. அந்த விடுபட்ட மூன்று புல

எண்களையும் பட்டா எண் 175-ல் சேர்த்து எனது மனைவி சசிகலா பெயரில் பட்டா வழங்க கடந்த 2022-ஆம் ஆண்டு விண்ணப்பம் செய்தேன். அதன்பேரில் எங்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட பட்டா எண்.175-ல் விடுபட்ட மூன்று புலஎண்களையும் சேர்த்து புதியதாக பட்டா வழங்கப்பட்டது. தற்போது மேட்டுதாங்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பயிர் கடன் கேட்டு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு விண்ணப்பம் செய்தேன். அவ்விண்ணப்பத்தை ஆய்வு செய்த வங்கி அதிகாரிகள் விவசாய நிலத்தின் பட்டாவில் வடிவேல் மனைவி சசிகலா என்று மூன்று முறை குறிப்பிட்டுள்ளது என்று என்னிடம் தெரிவித்து இதனை வருவாய்துறை பதிவேட்டில் மாற்றி வருமாறு தெரிவித்தார்கள். அதன்பிறகு நான் கடந்த 29.04.2025-ம் தேதி வீரணகுப்பம் VAO அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த VAO திரு.அகத்திய தூயவன் என்பவரிடம் பட்டாவில் பெயர் திருத்தம் செய்வது பற்றி கேட்டபோது, அவர் ஆன்லைனில் விண்ணப்பிக்குமாறு கூறினார். அவர் சொன்னபடி அன்றையதினமே எனது மனைவி சசிகலா பெயரில் ஆன்லைனில் பெயர் திருத்தம் செய்யவேண்டி விண்ணப்பம் செய்தேன். அதன்பிறகு கடந்த 14.05.2025-ஆம் தேதி வீரணகுப்பம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு பகல் சுமார் 12.00 மணிக்கு சென்று VAO அகத்திய தூயவன் அவர்களை நேரில் பார்த்து ஆன்லைனில் விண்ணப்பம் செய்த ஆவணங்களை அவரிடம் கொடுத்தேன். அதற்க்கு அவர் சரி உன்னுடைய வேலையை உடனடியாக முடித்து கொடுத்துவிடுகிறேன் என்றும், அதற்காக எனக்கு தனியாக பணம் ரூ.4,000/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னால் தரமுடியாது என்று கூறிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். பிறகு அன்று மாலை சுமார் 05.15 மணிக்கு எனது செல் 8838319148 எண்ணிலிருந்து VAO-வின் செல் 9345579958 எண்ணிற்கு தொடர்பு கொண்டு பணம் கொஞ்சம் குறைத்து சொல்லுமாறு கேட்டேன். அதற்கு அவர் பணம் எல்லாம் குறைக்க முடியாது என்றும், அவர் சொன்ன பணம் ரூ.4000/-ரெடியானதும் அவரை சந்தித்து கொடுக்குமாறு சொன்னார். நான் மீண்டும் 22.05.2025-ம் தேதி மதியம்

01.10 மணிக்கு எனது செல் பேனிலிருந்து VAO-வின் செல் போனிற்க்கு தொடர்பு கொண்டு எனது விண்ணப்பம் பற்றிகேட்டேன். அதற்கு அவர் பணம் ரூ.4000/- கொடுத்தால் உடனே ரெடியாகும் என்று கராராக தெரிவித்தார். ஏயுழு திரு.அகத்திய தூயவன் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்து எனது பட்டா பெயர் திருத்தம் செய்ய எனக்கு விருப்பம் இல்லை. எனவே, VAO திரு.அகத்திய தூயவன் என்னிடம் கேட்ட ரூ.4,000/- லஞ்சப்பணத்துடன் அவரை பார்க்க தயாராக உள்ளேன். எனவே, என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.4,000/- கேட்ட வீரணகுப்பம் VAO திரு.அகத்திய தூயவன் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) P.Vadivel 23.05.2025.

Sir, a computer typed complaint has been received by me on 23.05.2025 at 06.00 hrs. Subsequently a quick verification on the general reputation of the accused Tr.Agathiya Thuyavan was made and it is learnt to be not good and motive and antecedents of the informant have been checked and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.8/AC/2025 u/s 7 (a) of the PC Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today on 23.05.2025 at 06.45 hrs against the accused Tr.Agathiya Thuyavan. The original FIR and complaint is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and remaining copies are sent to the officers concerned.

23/5/25

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கிருஷ்ணகிரி.